## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண்.C.C. 66/2023**

2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 09 ம் தேதி செவ்வாய் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா. 1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பூங்கொடி | தொழில் | : Senior Administrative Assistant, Sub Court, Gingee. |
| தந்தை பெயர் | : சண்முகம் | | |
| கிராமம் | : கிருஷ்ணாபுரம் | சமயம் | : |
| வட்டம் | : செஞ்சி | சாதி | : |
| | | வயது | : |

சாட்சியையும் எதிரியும் செஞ்சி காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு. அசோக்குமார் Gr.1 - 2511 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**( எதிரி ஆஜர்.)**

**முதல் விசாரணை**

**1.** நான் செஞ்சி நீதிமன்ற வளாகத்தில் உள்ள செஞ்சி வட்ட சட்ட பணிகள் குழுவில் நிர்வாக உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரி எனக்கு தெரியும்.

2. ஆஜர் எதிரி நீண்ட நாட்களாக என்னை பின்தொடர்ந்து பாலியல் ரீதியாக துன்புறுத்தல் செய்துவந்தார். அது சம்மந்தமாக எனது தந்தை ஆஜர் எதிரியிடம் போய் கேட்டார். அதற்கு என் தந்தையை பார்த்து உன் மகள் பூங்கொடியை எனக்கு திருமணம் செய்து வைடா தெவிடியா பையா என்று ஆஜர் எதிரி அசிங்கமாக திட்டினார். அதன்பிறகு என் தந்தையின் மீது சைக்கிள் தூக்கி போட்டார். மேற்படி சம்பவமானது 29.05.2020 ந் தேதி கிருஷ்ணாபுரத்தில் உள்ள முத்து தெருவில் நடந்தது.

3. மேற்படி சம்பவம் குறித்து எனது தந்தை செஞ்சி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். அந்த புகாரின்பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு எதிரியை கைது செய்து சிறையில் அடைத்தார்கள். அதன்பின்னரும் ஆஜர் எதிரி என்னை பின்தொடர்ந்து பாலியல் ரீதியாக துன்புறுத்தல் செய்து வந்தார். 11.05.2022 ம் தேதி செஞ்சி காந்தி ரோட்டில் பாலாஜி சூப்பர் மார்க்கெட்டில் இருந்து நான் வெளியே வந்தபோது என்னை பார்த்து எதிரி என்னை தெவிடியா என்று திட்டி என் கையை பிடிக்க முற்பட்டபோது நான் எனது இருசக்கர வாகனத்தை எடுத்துக்கொண்டு அங்கிருந்து கிளம்பிவிட்டேன். அப்போதும் என்னை அடையாமல் விடமாட்டேன் என்று கத்தி பேசினார். அடுத்த நாள் 12.05.2022 ம் தேதி காலை

செஞ்சி பேருந்து நிலையத்திற்கு பின்புறத்தில் உள்ள வாகன நிறுத்தத்தில் தனது இருசக்கர வாகனத்தை நிறுத்திவிட்டு அலுவலக வேலை சம்மந்தமாக சங்கராபுரம் நீதிமன்றத்திற்கு செல்வதற்காக நான்கு சாலை சந்திப்பு ரோட்டுக்கு வந்தேன். நான்கு சாலை சந்திப்பில் உள்ள இந்து மெடிக்கல் ஷாப் எதிரில் நான் இருந்தபோது ஆஜர் எதிரி வந்து ஆபாசமாக பேசி அவரது மொபைலில் ஆபாசமாக இருந்த பெண்ணின் புகைப்படத்தை என்னிடம் காட்டினார். அவர் பேசிய ஆபாச வார்த்தைகளை என்னால் கூற இயலாத அளவிற்கு பேசினார். இவ்வளவுதான் நடந்தது. போலிசார் என்னை விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

**(1. 12.05.2022 ந் தேதியிட்ட புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**குறுக்குவிசாரணை:**

நான் வசிக்கும் இடமும் எதிரி வசிக்கும் இடமும் கிருஷ்ணாபுரம் பகுதி என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் கூறியவாறு சம்பவத்தை நான் கொடுத்த புகாரில் சொல்லப்படவில்லை என்றால் சொல்லப்படவில்லை. நான் கூறியதுபோல் எதிரியை முன்னதாக கைது செய்து சிறையில் அடைத்ததாக கூறிய வழக்கிற்கான சட்டப்பிரிவு, குற்றஎண் விவரம் தெரியுமா என்றால் தெரியவில்லை. எந்த சிறையில் அடைத்தார்கள் என்றால் திண்டிவனம் கிளைச்சிறையில் அடைத்தார்கள்.

என் தந்தையை எதிரி ஆபாசமாக பேசி திட்டிய பிறகும் என்னை எதிரி பின்தொடர்ந்து வந்த விவரத்தை புகாரில் நான் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் கூறுவதுபோல் என் தந்தையை எதிரி திட்டி சைக்களை போட்ட பிறகும் என்னை எதிரி பின்தொடர்ந்து வந்து பாலியல் ரீதியாக துன்புறுத்தி வந்ததாக நான் கூறுவது அப்பட்டமான பொய் என்றால் சரியல்ல. 12.05.2022 ம் தேதி எந்த நீதிமன்றத்தில் நான் பணிபுரிந்தேன் என்றால் அன்றைய தினம் நான் விடுப்பில் இருந்தேன். சம்பவமானது காலையில் நடந்ததனால் அன்று பணிக்கு செல்லாமல் விடுப்பு எடுத்து விட்டேன்.

12.05.2022 ம் தேதி நான் கூறுவது போல் நீதிமன்ற பணிக்கு போகாமல் விடுப்பு எடுத்திருந்தால் அதற்கான ஆவணத்தை புகாரோடு இணைத்து போலிசாரிடம் கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. அந்த விடுப்பு கடிதம் கொடுப்பதற்கு வாய்ப்பில்லை என்று சாட்சி கூறுகிறார். 12.05.2022 ம் தேதியன்று எந்த

நீதிமன்றத்தில் பணியாற்றுவதற்கு செல்ல இருந்தேன் என்றால் சங்கராபுரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்துடன் உள்ள சங்கராபுரம் வட்ட சட்ட பணிக்குழுவுக்கு பணிக்காக செல்ல இருந்தேன். 12.05.2022 ம் தேதியன்று சங்கராபுரம் வட்ட சட்ட பணிக்குழுவுக்கு பணிக்காக சென்றேனா இல்லையா என்றால் வேலைக்கு செல்லவில்லை. விடுப்பு எடுத்து விட்டேன். நான் கூறுவது போல் அன்றைய தினம் பிரச்சனையால் விடுப்பு எடுத்ததாக நான் கூறுவது அப்பட்டமான பொய் என்றால் சரியல்ல. எதிரி பாலியல் ரீதியாக என்னை பின்தொடர்ந்து மன ரீதியாகவும், உடல் ரீதியாகவும் தொல்லை கொடுத்து வந்த தேதியை குறிப்பாக புகாரில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

12.05.2022 தேதிக்கு முன்பாக எதிரிக்கு எதிராக காவல் நிலையத்தில் நான் புகார் ஏதேனும் கொடுத்தேனா என்றால் இல்லை. இவ்வழக்கு சம்மந்தமாக நான் மருத்துவரையோ அல்லது மனநல மருத்துவரையோ சந்தித்து ஆலோசனை ஏதேனும் பெற்றேனா என்றால் அதற்கான அவசியம் இல்லை. நான் கூறுவது போல் மனரீதியாகவும், உடல் ரீதியாகவும் எதிரி துன்புறுத்தியிருந்தால் அது சம்மந்தமான விவரத்தை போலிசாரிடமும் புகாரிலும் விளக்கமாக சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. நான் கூறுவது போல் பாலாஜி சூப்பர் மார்க்கெட் முன்பாக எந்த சம்பவமும் நடக்காத நிலையில் நடந்ததாக நான் கூறுவது அப்பட்டமான பொய் என்றால் சரியல்ல. 11.05.2022 ந் தேதி பாலாஜி சூப்பர் மார்க்கெட் முன்பாக நடந்ததாக நான் கூறிய சம்பவத்திற்கு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை.

12.05.2022 ந் தேதி காலை 6.35 மணி அளவில் செஞ்சி நான்கு முனை ரோட்டில் இந்து மெடிக்கல் எதிரே என்னிடம் எதிரி வந்து செல்போனில் ஆபாசபடம் காட்டி சொல்லமுடியாத அளவிற்கு பேசியதாக நான் கூறுவது அப்பட்டமான பொய் என்றால் சரியல்ல. நான் கூறுவது போல் சம்பவம் உண்மையாக இருந்திருந்தால் அங்குள்ள கண்காணிப்பு கேமராவில் உள்ள பதிவுகளை பதிவிறக்கம் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பார்கள் என்றால் சம்பவம் உண்மை என்று சாட்சி கூறுகிறார். நான் கூறுவது போல் ஆன்ராய்டு செல்போன் எதிரி வைத்திருக்கவில்லை என்றால் சரியல்ல. நான் கூறுவது போல் செல்போனில் ஆபாச புகைப்படங்களை எதிரி என்னிடம் காட்டவில்லை என்றால் சரியல்ல.

நான் கூறுவதுபோல் செஞ்சி பேருந்து நிலையத்திற்கு பின்புறத்தில் உள்ள வாகன நிறுத்தத்தில் எனது இருசக்கர வாகனத்தை நிறுத்திவிட்டு வந்ததற்கு அங்கு

பெற்ற வாகன டோக்கனை போலிசாரிடம் கொடுத்திருக்க முடியும் என்ற நிலையில் அந்த டோக்கனை போலிசாரிடம் காண்பித்தேனா என்றால் இல்லை. அதை போலிசாரிடம் காண்பித்து கொடுக்க வேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியவில்லை. நான் கூறுவது போல் பாலாஜி சூப்பர் மார்க்கெட்டில் பொருட்களை வாங்கி கொண்டு வெளியே வந்தபோது எதிரி என்னிடம் தகாத முறையில் நடந்ததாக கூறியது உண்மையாக இருந்திருந்தால் அன்றைய தினம் பாலாஜி சூப்பர் மார்க்கெட்டில் நான் வாங்கிய பொருட்களுக்கான ரசீதுகளை போலிசாரிடம் காண்பித்து அதையும் புகாருடன் கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. அந்த ரசீது போலிசாரிடம் தரவேண்டும் என்று எனக்கு தெரியாது.

பாலாஜி சூப்பர் மார்க்கெட்டில் அன்றைய தினம் பொருள் வாங்கிய ரசீதுகளையோ, செஞ்சி பேருந்து நிலையத்திற்கு முன்னால் உள்ள வாகன நிறுத்தத்தில் எனது வாகனத்தை நிறுத்தி வந்ததற்கு வாகன டோக்கனையோ என்னிடம் கேட்டார்களா என்றால் இல்லை.

புகாரில் என்னுடன் வாழ வேண்டும் என்றும், இல்லை என்றால் ஆசிட் மூலம் என் அழகை சீர்குலைத்து விடுவேன் என்று எதிரி மிரட்டியதாக கூறியிருப்பது பொய் என்றால் சரியல்ல. இந்து மெடிக்கல் அமைந்துள்ள இடத்திற்கும் செஞ்சி காவல் நிலையத்திற்கும்இடையே சுமார் 50 அடி தூரம் தான் உள்ளது என்றால் சரிதான். சம்பவம் காலை எத்தனை மணிக்கு நடந்தது என்றால் 6.35 மணிக்கு நடந்தது. எத்தனை மணிக்கு செஞ்சி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் 11, 12 மணி இருக்கும். அதன் பின்னிட்டு ஏதேனும் செஞ்சி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை.

நான் கொடுத்த புகாரின்பேரில் வழக்கு பதிந்தார்களா என்றால் CSR பதிந்தார்கள். அன்றைய தினம் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்களா என்றால் இல்லை. நான் கூறுவது போல் சம்பவம் உண்மையாக இருந்திருந்தால் அன்றைய தினமே முதல் தகவல் அறிக்கையை பதிந்திருப்பார்கள் என்றால் சரியல்ல. அ.சா.ஆ.1 புகாரை யார் எழுதியது என்றால் எனது உறவினர் சிவப்பிரகாசம் என்பவர் எழுதினார். மேற்படி சிவப்பிரகாசம் என்பவர் என் தங்கையின் கணவர் என்றால் சரிதான். எனது புகாரின்பேரில் 4 நாட்கள் கழித்துதான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். அந்த முதல் தகவல் அறிக்கையில் கையொப்பம் செய்து நகல் கொடுத்தார்களா என்றால் கொடுத்தார்கள்.

இந்த வழக்கில் எதிரி கைது செய்தார்களா என்றால் இல்லை. நீதிமன்றத்தில் நான் பணிபுரிந்து வந்த நிலையில் எனது அழுத்தத்தின் காரணமாகத்தான் எனது புகாரின்பேரில் 4 நாட்கள் கழித்து காலதாமதமாக முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்த அதிகாரி யார் என்றால் உதவி ஆய்வாளர் குமார்ஆவார். புகாரை செஞ்சி காவல் நிலையத்தில் யாரிடம் கொடுத்தேன் என்றால் குமார் உதவி ஆய்வாளரிடம் கொடுத்தேன். நான் கூறிய பாலாஜி சூப்பர் மார்க்கெட் முன்பாகவும், இந்து மெடிக்கல்ஸ் முன்பாகவும் உதவி ஆய்வாளர் குமார் என்பவர் வந்து பார்த்தாரா என்றால் வந்து பார்த்தார். எத்தனை மணிக்கு நான் கூறியது போல் 2 இடத்திலும் காவல் உதவி ஆய்வாளர் குமார் வந்து பார்த்தார் என்றால் 16 ந் தேதி காலை 8 மணி.

புகார் கொடுத்த 12.05.2022 ந் தேதி உதவி ஆய்வாளர் குமார் என்னிடம் விசாரித்து வாக்குமூலம் வாங்கினாரா என்றால் விசாரணை செய்தார்கள். இந்த வழக்கு சம்மந்தமாக விசாரணைக்கு வருமாறு போலிசார் அறிவிப்பு கொடுத்தார்களா என்றால் இல்லை. இந்த வழக்கு சம்மந்தமாக உதவி ஆய்வாளர் குமார் என்பவர் என்னை விசாரித்து நான் சொல்ல சொல்ல கணினி மூலமாக தட்டச்சு செய்தாரா என்றால் ஆமாம். எத்தனை மணிக்கு அவ்வாறு தட்டச்சு செய்து பதிவு செய்தார் என்றால் காலை 8.30 மணி இருக்கும். நான் கூறுவது போல் எந்த துன்புறுத்தலிலும் எதிரி ஈடுபடவில்லை என்றால் சரியல்ல. என் தந்தை மீது எதிரி சைக்கிளை தூக்கி போட்டதாக கூறிய நிலையில் அது முதல் எதிரி மீது எங்களுக்கு முன்விரோதம் கொண்டு வந்தோம் என்றால் எங்களுக்கு முன் விரோதம் இல்லை.

புகாரில் சொல்லப்பட்டுள்ள குற்றச்சாட்டிற்கும் நீதிமன்றத்தில் நான் கூறிய குற்றச்சாட்டிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**(ஆஜர் எதிரி எங்கள் வீட்டருகே வந்து இந்த சம்பவத்திற்கும் பிறகும் வீட்டை சுற்றி வருவதாகவும் என்னால் பால்கனியில் வெளியே வந்து நிற்க முடியாக அளவிற்கு துன்புறுத்தல் செய்வதாகவும், கோவில்களுக்கு வெளியே சென்று வரும்போது பின்தொடர்ந்து வருவதாகவும் இதனால் மிகுந்த மன உளைச்சல் அடைவதாகவும் சாட்சி கூறுகிறார். மேற்படி சம்பவத்திற்கு பிறகு கண்காணிப்பு கேமராவை எனது வீட்டில் வைத்த பிறகு தான் எங்கள் வீட்டு முன்பாக வந்து நிற்பதை எதிரி தவிர்த்திருப்பதாக சாட்சி கூறுகிறார்.)**

**எதிரி தரப்பில் கேட்டுக்கொண்டதின்பேரில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.**

**குறுக்கு விசாரணை** :

என் வீட்டு முன்பாக எதிரி வந்து மேலே கூறிய தொந்தரவு செய்ததாக கூறியது எப்போது என்றால் 2016 ம் வருடம். 2016 ம் வருடத்தில் அது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. மேற்படி விவரத்தை இந்த வழக்கில் நான் கொடுத்த புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். போலிசார் விசாரித்தபோது சொன்னேனா என்றால் சொன்னேன். நான் கூறுவது போல் வீட்டின் பால்கனிக்கு வெளியே வரமுடியாத அளவிற்கு எதிரி வீட்டு முன்பாக வந்து செல்வதாக நான் கூறுவது அப்பட்டமான பொய் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முழுவதும் முடிக்கப்பட்டது.**

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
**செஞ்சி.**